இடமே இல்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி, அந்தப் பகுதியில் அவர்கள் நீண்ட நெடுங்காலமாக இருப்பதால், அவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று கூறியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சட்டம் படித்தவர். நமது முதல்வர் அவர்கள், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற கொள்கையை உடையவர் என்ற காரணத்தால், இந்த அரசு அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, பட்டா வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, உறுப்பினருக்கு தொகுதியின் மீது இருக்கிற அக்கறையைப் பாராட்டுகிறேன். இருக்கிற சட்டத்தின் நடைமுறைகளைத் தெரிவித்தேன். இவற்றுக்கு மேல் அரசு எந்த நேரத்திலும் எதையும் செய்யலாம்.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி. நகர் தொகுதியில் கோடம்பாக்கத்தில், டிரஸ்ட் புரத்தில் குடிசைப் பகுதிகளில்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்பில்லாத வினா.

இரயில்வே மேம்பாலம்

3523 திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் இரயில்வே மேம்பாலம் அமைத்திட அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டத்தின் தலைநகரான கடலூர் நகரம், சுமார் 2 லட்சம் மக்கள் வசிக்கின்ற நகரமாகும். அந்த நகரத்தின் இதயப் பகுதியாக இருக்கின்ற திருப்பாதிரிப்புலியூர் போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற பகுதி. அங்கே ரயில்வே மேம்பாலம் அமைவது மிக அவசியமானதொன்றாகும். அந்த மக்களின் 20 ஆண்டுக்கால கோரிக்கையான அந்த மேம்பாலத் திட்டத்தை உடனடியாக ஏற்று நமது அரசு ரயில்வே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மே 5]

இலாக்காவுக்கு அதன் அவசியத்தை உணர்த்துமா—வலி யுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அதன் அவசியத்தை அரசு உணர்ந்த காரணத்தால்தான், சுமார் 230 லட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அது ரயில்வேயின் பொது மேலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். ரயில்வே இலாக்காவுடைய பரிந்துரை அதற்குத் தேவை. மேம்பாலம் அமையவேண்டிய இடத்தில் அவர்கள்தான் கட்டுவார்கள். ஆனால் அது இந்த ஆண்டு இடம் பெறவில்லை. இருந்தாலும், அரசு இந்த ஆண்டு மறுபடியும் அந்தப் பாலத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மத்திய அரசை, குறிப்பாக ரயில்வே இலாக்காவை வற்புறுத்தும்.

சாலைகளைச் செப்பனிடுதல்.

*3705 திரு. எஸ். ஆர். முனிரத்தினம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் நகருக்குள் இருக்கும் சாலைகளைச் செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவள்ளூர் நகரத்தில் ஸ்ரீ வீரராகவப் பெருமாள் கோயில் இருக்கிறது. அது வளர்ந்து வருகிற பகுதி. அமாவாசை தினத்தன்று பக்தர்கள் அதிகமாக வருகின்ற பகுதி அது. அங்கே சீராக இல்லாத பல பகுதிகளை எடுத்துக் கொண்டு, அந்தச் சாலைகளைச் செப்பனிடும் ஆலோசனை இந்த அரசுக்கு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, திருவள்ளூரைப் போல எல்லா ஊர்களிலும் கோயில்கள் இருக்கின்றன. கோயில்கள் இருக்கிற ஊரில் உள்ள எல்லா சாலைகளையும் அரசே எடுத்துக் கொள்ள முடியாது. நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் என்று இருக்கின்றன. நகராட்சிக்குள் செல்கின்ற மாநில அரசுக்குச் சொந்தமான, சாலைகளும் உண்டு. திருவள்ளூரைப் பொறுத்தவரையில்